## அதிகாரம் 16

# ஆகார் மற்றும் இஸ்மவேலின் கதை

ஆதியாகமம் 11:30 லேயே, சாராள் மலடியாய் இருந்தாள் என்று எழுத்தாளர் கூறினார்; என்றாலும் தேவனின் அடிப்படை ஆசீர்வாதம் என்னவென்றால் நான் உன்னை "பெரிய ஜாதியாக்குவேன்" (12:2) என்பது. தேவன், ஆபிரகாமிற்கு பல பிள்ளைகளை உண்டு பண்ணுவேன் என்றும், அவர்கள் கானான் தேசத்தை தெய்வீக வெகுமதியாக பெருவார்களென்று திரும்பத் திரும்ப கூறுகிறார் (12:7; 13:15, 16; 15:4-7).

தேவன், வாக்களிக்கப்பட்ட விதையாக தத்தெடுத்த சுதந்திரவாளியை ஏற்கவில்லை (15:2-4). உன் கர்ப்பப்பிறப்பே உனக்கு சுதந்திரவாளியாய் இருப்பான் என்று முக்கியமான உடன்படிக்கையை அவர் செய்தார் (15:4, 5, 13-18). சாராள், வாக்குத்தத்தத்தை காத்துக்கொள்ள தேவனுக்கு உதவ முயற்சித்தாள், ஆனால் அவளது திட்டம் கசப்பான முடிவுகளைத் தந்தது.

### ஆபிரகாம் குடும்பத்தில் சச்சரவு (16:1-6)

**1ஆபிராமுடைய மனைவியாகிய சாராய்க்குப்
பிள்ளையில்லாதிருந்தது. எகிப்து தேசத்தாளாகிய ஆகார் என்னும்
பேர்கொண்ட ஒரு அடிமைப்பெண் அவளுக்கு இருந்தாள். 2சாராய்
ஆபிராமை நோக்கி: நான் பிள்ளைபெறாதபடிக்குக் கர்த்தர் என்
கர்ப்பத்தை அடைத்திருக்கிறார்; என் அடிமைப்பெண்ணோடே சேரும்,
ஒருவேளை அவளால் என் வீடு கட்டப்படும் என்றாள். சாராயின்
வார்த்தைக்கு ஆபிராம் செவிகொடுத்தான். 3ஆபிராம் கானான்தேசத்தில்
பத்து வருஷம் குடியிருந்த பின்பு, ஆபிராமின் மனைவியாகிய சாராய்
எகிப்து தேசத்தாளான தன் அடிமைப்பெண்ணாகிய ஆகாரை அழைத்து,
அவளைத் தன் புருஷனாகிய ஆபிராமுக்கு மறுமனையாட்டியாகக்
கொடுத்தாள். 4அவன் ஆகாரோடே சேர்ந்தபோது, அவள்
கர்ப்பந்தரித்தாள்; அவள் தான் கர்ப்பவதியானதைக் கண்டபோது, தன்
நாச்சியாரை அற்பமாக எண்ணினாள். 5அப்பொழுது சாராய் ஆபிராமை
நோக்கி: எனக்கு நேரிட்ட அநியாயம் உமதுமேல் சுமரும்; என்
அடிமைப்பெண்ணை உம்முடைய மடியிலே கொடுத்தேன்; அவள் தான்**

**கர்ப்பவதியானதைக் கண்டு என்னை அற்பமாக எண்ணுகிறாள்; கர்த்தர் எனக்கும் உமக்கும் நடுநின்று நியாயந்தீர்ப்பாராக என்றாள். [6]அதற்கு ஆபிராம் சாராயை நோக்கி: இதோ, உன் அடிமைப்பெண் உன் கைக்குள் இருக்கிறாள்; உன் பார்வைக்கு நலமானபடி அவளுக்குச் செய் என்றான். அப்பொழுது சாராய் அவளைக் கடினமாய் நடத்தினபடியால் அவள் அவளை விட்டு ஓடிப்போனாள்.**

**வசனம் 1.** தெய்வீக வாக்குத்தத்தத்தைக் குறித்து ஆபிரகாம் நிச்சயமாக தன் மனைவியிடம் கூறி இருந்தான்: நாட்கள் செல்லச் செல்ல, அவள் தன் கணவனுக்கு **பிள்ளை பெறமுடியாத நிலையை அடைந்தாள்.** அவள் கர்ப்பந்தரிப்பதற்கான வாய்ப்புகள் மிக குறைவாக இருந்தது, ஏனென்றால், அவள் 75 வயது நிரம்பி இருந்தாள்.[1] இந்த முதிர்ந்த வயதில், பெண்களுக்கான வழி பாடுகளும் நின்று, இயற்கையாக கர்ப்பந்தரிக்க எந்த காரணங்களும் இல்லாமல் போய்விட்டது.

வேத எழுத்தாளர், **சாராயை** ஆபிரகாமின் **மனைவி** (אִשָּׁה, *'ishshah*, இஷ்ஷாக்) என்று குறிப்பிடுகிறார், பழைய ஏற்பாட்டில் "பெண்" அல்லது "மனைவி" என குறிப்பிடப்படும் பொதுவான சொல். தேவன் ஏவாளை கொடுத்தபோது, ஆதாம், "மனைவி" என்ற அர்த்தத்தில் முதல் முறையாக கூறினான் (2:23). இதற்கு எதிர்மறையாக, **ஆகார், எகிப்திய** பெண், சாராளின் **அடிமைப் பெண்** (שִׁפְחָה, *shipchah*, ஷிப்-சா) என குறிப்பிடப்படுகிறாள். பழைய ஏற்பாட்டில், பொதுவாக, இந்த வார்த்தை திருமணம் ஆன பெண்களோடு இருக்கும் அடிமைப் பெண்களை குறிக்கிறது.[2] எகிப்திலே பார்வோன் ஆபிரகாமிற்கு கொடுத்த அடிமைகளில் ஒருத்தியாக ஆகார் இருக்கலாம் (12:16), இப்போது சாராளின் அதிகாரத்தின் கீழ், அவளது பணிப்பெண்ணாக இருக்கின்றாள்.

**வசனம் 2.** அவளுக்கு ஏற்பட்ட மன அழுத்தத்தால், சாராள், தனக்கு **பிள்ளை பெறாதபடிக்குக் கர்த்தர் தன் கர்ப்பத்தை அடைத்தார்** என்று கர்த்தரை குற்றம் சாட்டுகிறாள். எதுவாகிலும், அவள் தன் அனுமானத்தில் சரியாக இருந்தாளா இல்லையா என்று அறிய வேறு வழி இல்லை. நிச்சயமாக, உடல் மற்றும்/அல்லது மனது சம்பந்தமான பல காரியங்கள் பெண்களை பிள்ளை பெறாதபடி செய்கிறது என்று நமக்கு தெரியும். இருப்பினும், அசாதாரணமான காரியம் ஆதியாகமத்தில் நடந்தது, இங்கு, கர்த்தர் கர்ப்பத்தை அடைத்தார், பின் கருத்தரித்தல் என்பது தெய்வீக இடைபடுதல் (20:17, 18; காண்க 29:31; 30:22) இல்லாமல் நடைபெறாது என்ற நிலை வந்தது. அவர்களது சூழ்நிலை எப்படி இருந்தாலும், சாராளின் மலட்டுத்தன்மைக்கான காரணம் இருவரின் விசுவாசத்தை சோதித்துப் பார்ப்பதே.

இந்நிலையில், சாராள், தனக்கு ஒரு பிள்ளை பெற முடியாதபடியினால், அவள் ஆபிரகாமை, (தன்) **அடிமை பெண்ணோடு**

**சேரும், ஒரு வேளை அவளால் என் வீடு கட்டப்படும்** என்று கூறினாள். இது நமக்கு இக்காலகட்டத்தில் விசித்திரமாக தோன்றும்; ஆனால், ஆண் பிள்ளை மூலம் தன் குடும்பப்பெயர் நிலைக்க செய்ய வேண்டிய முக்கியத்துவத்தினாலும் அக்காலத்தில், பிள்ளை பெற முடியாத மனைவியின் வெட்கத்தினாலும், சாராள் தனக்கு வேறு வழி இல்லை என்று நினைத்தாள்.

சாராள், தான் கர்ப்பந்தரிக்கும் நம்பிக்கையையும் பொறுமையையும் இழந்தாள். தனக்கு பிள்ளை இல்லை என்றால், தேவன் தன் சந்ததிக்குக் கொடுப்பேன் என்று ஆபிரகாமிற்கு வாக்களித்ததை எப்படி சுதந்தரிக்க முடியும்? பண்டைய கிழக்கு ஆசிய பகுதியில், பல மனைவிகளைக் கொண்டிருப்பதின் காரணம், தன் மனைவி மலடியாய் இருப்பதோ அல்லது ஆண்பிள்ளையைப் பெற திராணி இல்லாமல் இருப்பதே ஆகும். இப்படிப்பட்ட விஷயத்தில், கணவன் தனக்கு இரண்டாவது மனைவியை பெற எவ்வித தடையும் இல்லை, ஆனால், பொதுவாக ஆகாரைப் போன்று அடிமை மூலமாகவோ வேலைக்காரி மூலமாகவோ ஆண்பிள்ளையை பெறுவது வழக்கமாய் இருந்தது.

கானானுக்கு வர பத்து வருடங்களுக்கு முன் ஆபிரகாமும் சாராளும் பிறந்து வாழ்ந்து வந்த பண்டைய மொசப்பத்தோமிய தேசத்தின் சட்டங்களில் அதற்கு இடம் இருந்தது. எடுத்துக்காட்டாக, கி.மு. 15 ஆம் நூற்றாண்டில், நூசியில் ஒர் உரை கூறுகிறதாவது, சிறப்புமிக்க குடும்பத்தை சேர்ந்த ஒரு பெண், தனக்கு பிள்ளை பெற முடியாமல் இருந்தால், லுலுவிலிருந்து (அடிமைப் பெண்கள் தெரிந்தெடுக்கப்படும் இடம்) ஒரு பெண்ணை தன் இடத்திற்கு அனுப்பி தனக்கு பிள்ளை பெற வைக்கலாம் என்பதாகும். இதன் மூலம் பிறந்த பிள்ளை அவளது பிள்ளையாக கருதப்படும் மற்றும் முறையாக பிறந்த பிள்ளைக்கான சகல உரிமைகளும் இக் குழந்தைக்கும் இருக்கும்.[3]

சாராள் ஒரு வேளை சூழ்ச்சியில் அகப்பட்டதைப் போல உணர்ந்திருப்பாள். தனக்கு சமமான உரிமைகளை உடைய மற்றொரு பெண்ணை விரும்பமாட்டாள். எனினும், ஆபிரகாமை தன் அடிமைப் பெண் ஆகாரின் பெயரில் தனக்கு ஒரு குழந்தையைப் பெற வைப்பதையே சாராக்கள் தன் மனதில் நினைத்துக் கொண்டிருந்தாள்.

இங்கே உபயோகப்படுத்தப்பட்டுள்ள வார்த்தைகள் குறிப்பிடத்தக்கது, குடும்பத் தலைவனான ஆபிரகாம் தன் மனைவியாகிய சாராளின் வார்த்தைகளினால் தவறாக வழிநடத்தப்பட்டதை ஆதாம், ஏவாளின் வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து நடந்ததை (3:17) கூறியதைப் போலவே வர்ணிக்கப் பட்டுள்ளது.[4] **சாராயின் வார்த்தைக்கு ஆபிராம் செவி கொடுத்தான்** என்ற வார்த்தை எபிரெய மொழியில் அவளது ஆலோசனைக்கு கீழ்ப்படிந்தான் என்று கூறுவதாகும். மற்றொரு விதத்தில் கூறினால், ஆபிரகாம் “மனிதனின்

வீழ்ச்சி” மீண்டுமாய் வரும்படி செய்தான். தேவனை விசுவாசிக்காமல் அவரது வார்த்தையைப் பின்பற்றி நடக்காமல் ஆபிரகாம்; தன் மனைவியின் வார்த்தையை கேட்டு அதற்குக் கீழ்ப்படிந்து நடந்தான். அதினால் மன வருத்தத்திற்குரிய விளைவு நிகழ்ந்தது.

**வசனம் 3.** பத்து வருடங்கள் வாக்களிக்கப்பட்ட தேசத்தில் வாழ்ந்த பின்னும் மகனைப் பெற்றெடுக்க எந்த வாய்ப்பும் இல்லாததால், **எகிப்து தேசத்தாளான தன் அடிமைப்பெண் ஆகாரை ஆபிரகாமிற்கு மறுமனையாட்டியாகக் கொடுத்தாள்**. அடிமைப் பெண் (*ஷிப்ச்சா*) ஆகார் ஆபிரகாமிற்கு மறுமனையாட்டி (*இஷ்ஷாக்*) ஆனாலும், அவள் இரண்டாவது மனைவியே; ஒரு வேளை அவளுக்கும் சில உரிமைகள் இருந்தாலும், சாராளுக்கு இணையான உரிமை அவளுக்கு இல்லை. அவள் ஆபிரகாமிற்கு கொடுக்கப்பட்ட வெகுமதி, ஆபிரகாமே அவ்வெகுமதியை பெற்றுக் கொண்டான். ஆகாருக்கு வைப்பாட்டியாவதைத் தவிர வேறு வாய்ப்பு இல்லை.

பழைய ஏற்பாட்டின் மிகுதியான பகுதிகளில் “வைப்பாட்டி” (פִּלֶגֶשׁ, *pilegesh,* பில்லெகேஷ்) மற்றும் “மனைவி” (אִשָּׁה, *’ishshah*, இஷ்ஷாக்) ஒன்றுக்கொன்று தனித்தன்மையாய் இருக்கிறது. இருப்பினும், இங்கு ஒரே பெண்ணை இரு வார்த்தைகளாலும் ஆதியாகமத்தின் எழுத்தாளர் விவரிக்கிறார்: ஆகார் (16:3; 25:6), கேத்துராள் (25:1, 6) மற்றும் பில்காள் (30:4; 35:22). இந்த தகவலை அடிப்படையாகக் கொண்டு, விக்டர் ஹாமில்டன் அனு மானிப்பது என்னவென்றால், ஆபிரகாமின் காலத்தில் ஒரே அர்த்தமுடைய பதங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் மற்றும் வைப்பாட்டியை கொண்டிருப்பதை குறிக்கும் எவ்வித சொல்லும் உபயோகப்படுத்தப்படவில்லை என்பதாகும்.[5]

**வசனம் 4.** சாராளின் வேண்டுகோளின்படி **ஆபிரகாம் ஆகாரோடு சேர்ந்தான்** - அதாவது, அவளோடு உடல் உறவுக் கொண்டான். மீண்டும் இந்த நிகழ்வு கூறப்படாததால், இது ஒரு முறை மட்டுமே நடந்திருக்கலாம். ஆபிரகாமும் அடிமைப் பெண்ணும் சாராளின் வார்த்தையைக் கேட்டு அப்படியே நடந்தார்கள், ஆகார் **கர்ப்பந்தரித்ததும்** அவளது திட்டம் வெற்றி அடைந்தது போல தோன்றுகிறது. என்றாலும் இந்த வெற்றி சாராளுக்கு மனமகிழ்ச்சியை தரவில்லை. சிறுமைப்பெண், தான் கர்ப்ப வதியானதைக் கண்டபோது **தன் நாச்சியாரை அற்பமாய்** (இகழ்ந்தாள்) எண்ணினாள். இதனால் ஆகாரை தன் இடத்திற்கு அச்சுறுத்தலாய் எண்ணி, சாராள் ஆகாரின் மீது கொண்டிருந்த பொறாமையை தூண்டி விடச்செய்தது. பல மனைவிகளை உடையது ஏன் தேவ சித்தத்திற்கு புறம்பானது என்பதற்கு இதுவே ஒரு முக்கிய காரணம். ஆதியில் தேவன் ஆதாமிற்கு ஒரு மனைவியையே கொடுத்தார் (2:24). போட்டி மனப்பான்மை, கோபம் மற்றும் நிலையாமையே பல மனைவிகளை உடைய திருமணங்களுக்கு

தவிர்க்க முடியாத காரணங்களாகின்றன (20:30, 31; 30:8; 35:22), மற்றும் அழிவிற்குறிய மனப்போராட்ட நிலை ஆபிரகாமின் வீட்டிலும் நடந்தது.

**வசனம் 5.** சாராள் மீது ஆகாரின் மேட்டிமையான இந்த சிந்தையினால், சாராள் ஆபிரகாமை நோக்கி **எனக்கு நேரிட்ட அநியாயம் உமது மேல் சுமரும்** என்றாள். தன் திட்டத்திற்கான வருந்தத்தக்க ஆனால் எதிர்பார்த்த விளைவால், மீண்டும் ஆபிரகாமை குற்றஞ்சாட்ட முனைந்தாள்.[6] அவளது கோபத்தால், "எனக்கு நேரிட்ட அநியாயம்" என்று கூறுவது தன் கணவனுக்கு தொந்தரவு கொடுக்க காரணமாக மட்டுமல்லாமல் ஆகாரின் இகழ்ச்சியும் காரணம் ஆகும். "அநியாயம்" என்பதற்கான எபிரெயப் பதம் (חָמָס, *chamas*) என்பதாகும். வெள்ளத்திற்கு காரணமான பாவத்தையும் "கொடுமை" என்பதும் இதே வார்த்தையைக் கொண்டு 6:11, 13ல் கூறப்பட்டுள்ளது. யாக்கோபும், தன் மகனை கொன்ற மனிதரைக் குறித்து 49:5ல் இதே வார்த்தையைக் கூறுகிறான் (காண்க 34:25). வசனத்தில், ஆகார் சாராளை உடலளவில் கொடுமைப்படுத்தினாள் என்பதற்கான எந்தக் குறிப்பும் கூறப்படவில்லை என்றாலும், சாராள் அவள் மீது மனப்பான்மையை கொடுமையாகவும் எதிர்ப்பாகவும் கருதி அவளை குற்றஞ்சாட்டினாள்.

ஆகார் சாராளை அவமதித்தது எதை காட்டுகிறது என்றால், அவள் தன்னை தன் நாச்சியாருக்கு சமமாய் கருதினாள், ஏனென்றால், அவள் தன் எஜமானுக்கு குழந்தையை பெற்றுக் கொடுத்தாள், ஆனால் சாராளால் அது இயலாமல் இருந்தது. ஒரு வேளை இதுவே காரணமாக இருந்தால், ஆகார் சற்று அதிகமாகவே நடந்து கொண்டாள். பண்டைய சட்டதிட்டங்கள் இரண்டாவது மனைவியின் இத்தகைய செயலிலிருந்து முதல் மனைவியை காப்பாற்றுகிறது. ஹமுறபியின் சட்டங்கள், பிள்ளை பெற தன் அடிமையை தன் கணவனுக்கு கொடுத்த ஒரு மனைவியைக் குறிப்பிடுகிறது. அது கூறுவது என்னவென்றால், "அடிமைப் பெண் பிள்ளை பெற்று எஜமாட்டிக்கு இணையாகத் தன்னைக் கருதினால், எஜமாட்டி அவளை விற்காமல் அடிமைக்கான அடையாளத்தை யிட்டு, அடிமைகளில் ஒருத்தியாக எண்ணப்படக்கடவள்."[7] நீதிமொழிகள் 30:23ல் பூமி சஞ்சலப்படக்கூடிய நான்கு காரியங்கள் கூறப்பட்டுள்ளது, அதில் ஒன்று "அடிமைப் பெண்ணினிமித்தம் நாச்சியார் இகழப்படுவது" ஆகும்.

சாராள் நீதிக்காக மேல்மன்றத்தை முறையிடுகிறாள், **கர்த்தர் எனக்கும் உமக்கும் நடுநின்று நியாயந்தீர்ப்பாராக** என்றாள். அவள் கர்த்தரை நோக்கி கூப்பிட்டு தன் கணவன் தெய்வீக நீதிக்கு செவிகொடுத்து தனக்கான இடத்தை இந்த அடிமை பெண்ணிடம் இருந்து பெற்று தந்து அவளது திமிருக்கு முடிவு செய்ய வேண்டுவது போல தோன்றுகிறது. இந்த குற்றச்சாட்டு கர்த்தர் எனக்கும் உமக்கும் நடுநின்று நியாயந்தீர்க்க ஜெபமும் ஆகும்.

**வசனம் 6.** ஆகார் தன் நாச்சியாருக்கு மேலாக தன் சிந்தையை உயர்த்த துவங்கியபோது, அவள் மீது இருந்த தன் அதிகாரத்தை விட்டு, **இதோ, உன் அடிமைப் பெண் உன் கைக்குள் இருக்கிறாள், உன் பார்வைக்கு நலமானபடி** [טוֹב, *tob*] டேப்ஸ **அவளுக்குச் செய் என்றான்.** இப்படியாக அவளுக்கு பதிலளிப்பதினால், சாராள் ஆகாரை கொடுமையாக நடத்தாமல் கருணையுடனும் சரியான விதத்திலும் நடத்துவாள் என்று நினைத்திருப்பான். இருந்தாலும், இது வீண் நம்பிக்கையானது, மாறாக, **சாராள் அவளை கடினமாய் நடத்தினாள்.** ஆகாருக்கு செய்த அநீதியை குறிக்கும் சொல்லின் அர்த்தம் என்னவென்றால் עָנָה (*'anah*, அனா) “கட்டாயப்படுத்து” அல்லது “தண்டி அல்லது தண்டனைக்குட்படுத்து.”[8] இஸ்ரவேலர்கள் அடிமைப்பட்டு இருந்தபோது எகிப்தியர்கள் அவர்களுக்கு செய்ததை கூறவும் இந்தச் சொல்லே பயன்படுத்தப்பட்டுள்ளது (யாத். 1:11, 12). துன்பப்படுத்துவதற்கான சரியான காரணம் தெரியவில்லை, ஆனால் சாராள், ஆகார் **தன்னை விட்டு** தான் பிறந்த இடமான எகிப்திற்கு போகிற வழியாகிய வனாந்திரத்திற்கு ஓடிப் போகும் வரை கொடுமைப்படுத்தினாள் (16:1, 7).

## இஸ்மவேலின் பிறப்பு (16:7-16)

**7கர்த்தருடைய தூதனானவர் அவளை வனாந்தரத்திலே சூருக்குப்போகிற வழியருகே இருக்கிற நீரூற்றண்டையில் கண்டு: 8சாராயின் அடிமைப் பெண்ணாகிய ஆகாரே, எங்கேயிருந்து வருகிறாய்? எங்கே போகிறாய்? என்று கேட்டார்; அவள்: நான் என் நாச்சியாராகிய சாராயைவிட்டு ஓடிப்போகிறேன் என்றாள். 9அப்பொழுது கர்த்தருடைய தூதனானவர்: நீ உன் நாச்சியாரண்டைக்குத் திரும்பிப்போய் அவள் கையின் கீழ் அடங்கியிரு என்றார். 10பின்னும் கர்த்தருடைய தூதனானவர் அவளை நோக்கி: உன் சந்ததியை மிகவும் பெருகப்பண்ணுவேன்; அது பெருகி எண்ணி முடியாததாயிருக்கும் என்றார். 11பின்னும் கர்த்தருடைய தூதனானவர் அவளை நோக்கி: நீ கர்ப்பவதியாயிருக்கிறாய், ஒரு குமாரனைப் பெறுவாய்; கர்த்தர் உன் அங்கலாய்ப்பைக் கேட்டபடியினால், அவனுக்கு இஸ்மவேல் என்று பேரிடுவாயாக. 12அவன் துஷ்டமனுஷனாயிருப் பான்; அவனுடைய கை எல்லாருக்கும் விரோதமாகவும், எல்லாருடைய கையும் அவனுக்கு விரோதமாகவும் இருக்கும்; தன் சகோதரர் எல்லாருக்கும் எதிராகக் குடியிருப்பான் என்றார். 13அப்பொழுது அவள்: என்னைக் காண்பவரை நானும் இவ்விடத்தில் கண்டேன் அல்லவா என்று சொல்லி, தன்னோடே பேசின கர்த்தருக்கு நீர் என்னைக்காண்கிற தேவன் என்று பேரிட்டாள். 14ஆகையால், அந்தத் துரவு பெயர் லகாய்ரோயீ என்னப்பட்டது; அது**

**காதேசுக்கும் பாரேத்துக்கும் நடுவே இருக்கிறது. [15]ஆகார் ஆபிராமுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள்; ஆபிராம் ஆகார் பெற்ற தன் குமாரனுக்கு இஸ்மவேல் என்று பேரிட்டான். [16]ஆகார் ஆபிராமுக்கு இஸ்மவேலைப் பெற்றபோது ஆபிராம் எண்பத்தாறு வயதாயிருந்தான்.**

**வசனம் 7.** ஆகார் சாராளுடைய கோபத்துக்கு தப்பி ஓடும்போது, வசனம் சொல்கிறது, **கர்த்தருடைய தூதனானவர் அவளை வனாந்தரத்திலே சூருக்குப்போகிற வழியருகே இருக்கிற நீரூற்றண்டையில் கண்டு**. "கர்த்தருடைய தூதனானவர்" என்கிற சொற்றொடர் பழைய ஏற்பாட்டில் ஐம்பத்தி எட்டு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. சில நேரங்களில் அவை, தேவனுடைய பிரதிநிதியாக பூமிக்கு அனுப்பப்படும் பரலோகவாசியைக் குறிக்கிறது. பண்டைய கிழக்கு ஆசிய பகுதியில், ஒரு ராஜாவின் தூதன் அந்த ராஜாவுக்கு பதிலாகத்தான் நடத்தப்பட வேண்டும். கர்த்தருடைய தூதனானவர் (מַלְאָךְ, *mal'ak*, மலாக்) என்கிற வாக்கியம் வேதாகமத்தில் பொதுவாக, தேவனுடைய பிரதிநிதியாக செயல்படுகிற மனிதனையும், தேவனுக்காக பேசுகிற மற்றும் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிற மனிதனையும் குறிக்கிறது.

என்றாலும், வேதாகம கதைகளில் "கர்த்தருடைய தூதனானவர்" பெரும்பாலும் தேவனைப்போல பேசி இருக்கிறார் மற்றும் தேவனாக வெளிப்பட்டிருக்கிறார். கர்த்தருடைய தூதனை கண்டதாக சாட்சிக் கொடுத்தவர்கள் தாங்கள் தேவனை கண்டதாகவே ஆச்சரியப்பட்டிருக்கிறார்கள். "கர்த்தருடைய தூதனானவர்" என்பவர் கண்களுக்கு தெரியும் தேவனுடைய வெளிப்பாடாக இருந்திருக்கக்கூடும். சில நேரங்களில் மனித வடிவத்திலும், வேறு சில இடங்களில் மகிமையான அக்கினி சூளையையும் கண்டு அது தேவன் என்றே ஜனங்கள் யூகித்தார்கள்.

கர்த்தருடைய தூதனானவர் அவளை வனாந்தரத்திலே **சூருக்குப்போகிற வழியருகே இருக்கிற நீரூற்றண்டையில் கண்டார்** என்பது ஆகார் தனிப்பட்ட விதமாக ஆசீர்வதிக்கப்பட்டவள் என்பதை குறிக்கிறது. "சூர்" (שׁוּר, *Shur*) என்பதற்கு "சுவர்" என்று அர்த்தம் (49:22; யோபு 24:11), இது அசியாடிக்ஸ்-ன் படையெடுப்பிலிருந்து எகிப்தின் கிழக்கு எல்லைகளை பாதுகாக்கிற ஒரு வரிசையான கோட்டைகளைக் குறிக்கலாம் (25:18; 1 சாமு. 15:7). சீனாய் வனாந்திரம் வழியாக தப்பியோட முயற்சித்தது ஆகாருடைய முட்டாள்தனம், ஏனென்றால் கானானுக்கும் எகிப்திற்கும் இடையே நூறு மைல் நீண்டபயண தூரத்தில் தண்ணீர் அபூர்வமாய் இருந்தது, உணவும் ஏறக்குறைய இல்லாதிருந்தது.

**வசனம் 8.** கர்த்தருடைய தூதனானவர் **ஆகாரை** கண்ட போதே அவள் **சாராயின் அடிமைப்பெண்** என்றும் அவள் தப்பி ஓடிவந்த சூழ்நிலையையும் அறிந்திருந்தார். ஆகையால், **எங்கேயிருந்து**

**வருகிறாய்? எங்கே போகிறாய்?** என்ற இரண்டு கேள்விகளுமே சொல்லணிக்கலை சார்ந்ததாக இருந்தது. அந்த கேள்விகள் ஆபிரகாமுடைய வீட்டிலிருந்து வெளியேறுவதால் வரும் விளைவுகளை மறுபடி சிந்திக்க வைத்தது. **நான் என் நாச்சியாராகிய சாராயைவிட்டு ஓடிப்போகிறேன்** என்று ஆகார் உண்மையாய் பதிலளித்தாள்.

**வசனம் 9.** இந்த இடத்தில் **தேவதூதன்** அவளுக்குக் அறிவுறுத்தியதாவது, **நீ உன் நாச்சியாரண்டைக்குத் திரும்பிப் போய், அவள் கையின்கீழ் அடங்கியிரு என்றார்.** சாராயிடத்திற்குத் திரும்பிப்போய் அடிபணிந்து தன்னை தாழ்த்தி வாழ்வது ஆகாருக்கு விரும்பத்தகாததாக இருந்திருக்கலாம், ஆனால் அந்த தனித்த வனாந்திரத்தில் அவளுக்காக காத்திருந்த நிச்சயமான மரணத்தை பார்க்கிலும் இந்த முடிவு சிறந்தது.

**வசனம் 10. தேவதூதன்** வெளிப்படுத்தியதாவது, **கர்த்தர் அவள்** சந்ததியை மிகவும் பெருகப்பண்ணுவதின் மூலம் அவளை ஆசீர்வதிப்பார், **அது பெருகி, எண்ணி முடியாததாயிருக்கும்.** தேவன் இதே போல் ஆபிரகாமோடு வாக்குத்தத்தம் செய்திருந்தார் (13:16; 15:5), ஆயினும் ஆதியாகமத்தில் தேவன் நேரடியாக வாக்குத்தத்தம் செய்த ஒரே பெண் ஆகார் தான். தொன்மையான காலத்தில் அதிகப்படியான கருச்சிதைவுகள் மற்றும் இறப்பும் குழந்தை பிறப்பின் போது நேர்ந்தது. இந்த சூழ்நிலையில், ஒரு குமாரனைப் பெறுவாய் அது பெருகி, எண்ணிமுடியாததாயிருக்கும் என்ற தெய்வீக வாக்குத்தத்தம் அவளுடைய ஆவியை உயர்த்தியிருக்க வேண்டும் மற்றும் கானானுக்கு திரும்பிச் செல்ல மனஉறுதியை அளித்திருக்க வேண்டும்.

**வசனம் 11.** ஆகார் கர்ப்பவதியாக இருப்பது **தேவதூதனுக்குத்** தெரியும் என்பதை வெளிப்படுத்தும்படியாக மறுபடியும் ஆகாரோடு பேசினான். பின்பு அவள் **ஒரு குமாரனைப் பெறுவாள்** என்று அறிவித்தான். புதிரான நபராக அவளுக்கு தரிசனமானவர் அதிக வெப்பத்தினால் வெளிப்படும் ஒரு மாயத்தோற்றம் இல்லை என்பதற்கு இந்த வார்த்தைகளே ஆதாரமாக உள்ளது. இது தேவனிடத்திலிருந்து வந்த வெளிப்பாடாக தான் இருக்க வேண்டும் என்று அவள் அறிந்திருந்தாள், ஏனென்றால், அவர் மாத்திரமே பிறக்காத அவளுடைய **குழந்தையின்** பாலினத்தை அறிந்திருக்க முடியும். கடைசியாக, ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்ட வாரிசு அவன் எண்பத்தாறு வயதாகும்போது வழங்கப்படும் என்று தோன்றியது (16:16); மேலும் ஒரு வாடகைத் தாயாக தன் பங்கு நிச்சயமாக வெற்றிகரமானது என்று ஆகார் நினைத்தாள்.

கூடுதலாக, அந்த குழந்தையின் **பெயர் இஸ்மவேலாக** இருக்க வேண்டும் என்று தேவதூதன் ஆகாருக்கு வெளிப் படுத்தினான்.அவன் ஒரு காரணம் கொடுத்தான்: **கர்த்தர் உன் அங்கலாய்ப்பைக் கேட்டபடியினால்.** “இஸ்மவேல்” (יִשְׁמָעֵאל, *Yishma‘e'l*, இஸ்மாஏல்)

என்பதற்கு “தேவன் கேட்கிறார்” அல்லது “தேவன் கேட்டார்” என்று அர்த்தம். இது ஒரு பொதுவான எபிரெய வார்த்தை விளையாட்டு, தன் நாச்சியாராகிய சாராயினால் கடினமாய் நடத்தப்பட்ட ஆகாரின் உபத்திரவத்திற்கு தேவன் செவி கொடுத்தார் என்பதை இங்கே குறிக்கிறது.

**வசனம் 12.** ஆகாருக்கு விவரிக்கப்பட்ட குழந்தையினுடைய இயல்பு, குணம், மற்றும் நோக்கம், எந்த ஒரு தாயும் விரும்பக்கூடியதற்கு மிக வித்தியாசமாக இருக்கும். தேவதூதனை பொறுத்தவரை, **அவன் துஷ்ட மனுஷனாயிருப்பான். அவனுடைய கை எல்லாருக்கும் விரோதமாகவும், எல்லாருடைய கையும் அவனுக்கு விரோதமாகவும் இருக்கும்.** “காட்டு கழுதை” (எரே. 2:24; ஓசியா 8:9) என்ற அர்த்தத்தை கொண்ட פֶּרֶא (*pere'*) என்கிற வார்த்தை, இஸ்மவேலை உருவகமாக குறிக்க பயன்படுத்தப் பட்டுள்ளது; அவன் பாலைவனத்தில் வாழ்கிற “சுதந்திரமான நாடோடியாக”[10] இருப்பான். இங்கே அடையாளம் கண்டுபிடிக்கப்பட்ட உயிரினம் பெரும்பாலாக கழுதையின் தோற்றத்தை விட குதிரை போலவே தோற்றமுடையது, ஆனால் வீட்டு வளர்ப்பை எதிர்க்கக்கூடியது (யோபு 39:5-8). இதுப்போலவே இஸ்மவேல், நாகரீகத்தையும் சமூக மரபையும் எதிர்க்கிற துஷ்ட மனுஷனாயிருப்பான். அவனுக்கு கர்வமும், கீழ்ப்படியாத மனப்பான்மையும் மற்றும் சமூகத்தோடு ஒத்து போகாத குணமும் இருக்கும். அவன் உள்ளே பொருந்த மறுத்து, எல்லாருடைய எதிரியாக வாழ்வான்; மேலும் அனைவரும் அவனை இவ்வழியாக தெரிந்துகொள்வார்கள்.

இந்த காரணத்திற்காக, இஸ்மவேல் பெரிய அரபிய பாலைவனத்தினுடைய ஓரத்தின் மேலிருக்கிற கானானுடைய கிழக்கு தேசத்தை ஆக்கிரமித்து, **தன் சகோதரர் எல்லாருக்கும் கிழக்காகக் குடியிருப்பான்.** இந்த தீர்க்கதரிசனம்,சிலநேரங்களில் மனித அடிமைகளைக் கடத்தி, மெசபெத்தோமியாவிலிருந்து எகிப்துக்கு பெரிய பாலைவனத்தை கடந்து போகும் பிற்கால இஸ்லாமிய வணிகர்களுக்கு பொருந்தும் (37:25-28; 39:1). மற்ற இஸ்மவேலர்கள், பல்வேறு அரபிய நாடோடிகளோடு இணைந்து, திடீர் சோதனை செய்து கானானில் நிரந்தர குடியேற்றங்களைக் கொள்ளையிட்டார்கள் (நியா. 7:12; 8:24). எனினும், இந்த எபிரெய வாக்கியத்தை வித்தியாசமாக மொழிபெயர்க்க முடியும். “கிழக்கே நோக்கி” என்கிற உணர்ச்சி வெளிப்பாடு עַל־פְּנֵי (*'al p^e^ney*), என்ற வார்த்தையிலிருந்து வருகிறது, “முகத்திற்கு விரோதமாக” என்பது இதன் இலக்கியரீதியான பொருள். NIV மொழிபெயர் சொல்கிறது, இவன் “தன் சகோதரர் எல்லாருக்கும் எதிராகக் குடியிருப்பான்” என்று இந்த மொழிபெயர்ப்பு 16:12இன் முந்திய பகுதியோடு நன்கு ஒத்துப்போகிறது. மேலும், NASB மொழிபெயர்ப்பு இந்த தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றத்தை 25:18இல்,

"அவன் தன் சகோதரர் எல்லாருக்கும் விரோதமாக குடியேறினான்"[11] என்று வழங்குகிறது.

**வசனம் 13.** இந்த தெய்வீக எதிர்படுதல் மூலமாக, யெகோவாவை கேட்கிற (16:11) மற்றும் காண்கிற தேவனாக ஆகார் அடையாளம் கண்டு கொண்டாள்; அவர் அவளுக்கு செவிகொடுத்து அவளுடைய சிறுமையிலும் விரக்தியிலும் அவளைக் கண்டார். அவள் அநேகமாக "யெகோவா" அவனுடைய தேவனென்று ஆபிரகாம் பேசுவதை கேட்டிருக்கலாம்; மேலும் தேவதூதன் அதே வார்த்தையை (יהוה, *YHWH;* யெகோவா; 16:11) பயன்படுத்தியபோது, **தன்னோடு பேசிய கர்த்தருடைய நாமத்தை கூப்பிட்டாள்.** அவள் **நீர் என்னைக் காண்கின்ற தேவன்** என்று கூறினாள். எபிரேய மூல வாக்கியம் புரிந்துகொள்ள கடினமாக இருந்தாலும், அவளுடைய அடுத்த அறிக்கை அநேகமாக NIV மொழிபெயர்ப்பில் வழங்கப்பட்டது போல் அவள் தேவனைக் கண்டாள் என்பதின் ஒப்புதல் மாத்திரமல்ல. **அவரை கண்ட பிறகும் நான் இங்கே உயிரோடு இருக்கிறேனா?**[12] என்று அவளுடைய ஆச்சரியத்தில் கேட்டாள். தேவனையோ அல்லது அவருடைய தெய்வீக பிரதிநிதியையோ கண்டவர்கள் பெரும்பாலும் மரணத்திற்கு பயந்தார்கள்; அவருடைய பரிசுத்த சந்நிதியில் தங்களுடைய முழுமையான பாவத்தன்மையை உணர்ந்தார்கள் (32:30; நியா. 6:22, 23; 13:22; ஏசாயா 6:5; காண்க யாத். 33:20).

**வசனம் 14.** இதன் பிறகு எழுத்தாளர், **காதேசுக்கும் பாரேத்துக்கும் நடுவே** இருந்த **கிணற்றின் பெயர் பீர் லகாய்ரோயீ** என்று வெளிப்படுத்தினார். இந்த பெயர் "என்னை காண்கிற உயிரோடு இருக்கிறவரின் கிணறு" என்ற அர்த்தத்தைக் கொண்டது.[13] "காதேஸ்" நெகேவிற்கும் (தெற்கு கானான்) சீன் வனாந்தரத்திற்கும் இடையே உள்ள எல்லையில் இருந்தது (எண். 13:21, 26 பார்க்கவும்), ஆனால் "பீர் லகாய்ரோயீ" மற்றும் "பாரேத்தின்" துல்லியமான இட அமைப்புகள் உறுதியற்றதாக இருக்கிறது. பீர் லகாய்ரோயீ, ஈசாக்கு சில நேரங்களில் வசிக்கும் நெகேவிலுள்ள நீர்பாய்ச்சும் இடமாக இருந்தது (24:62; 25:11).

**வசனம் 15.** வனாந்திரத்தில் ஆகாருடைய அனுபவத்திற்குப் பிறகு - ஆபிரகாமுடைய எகிப்திய மறுமனையாட்டி அவன் வீட்டிற்குத் திரும்பிச் செல்ல வழி செய்தாள் - அது சாராயிடத்திற்கு திரும்பச் செல்லும்படி தேவதூதன் உற்சாகப்படுத்தியதையும் மேலும் ஒரு மகனையும் பல சந்ததிகளையும் குறித்த வாக்குத்தத்தத்தையும் உள்ளடக்கியது. காலம் நிறைவேறியபோது, தேவதூதன் சொன்னதுபோல் **ஆகார் ஆபிராமுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள்.** அவளுக்கு எந்த சந்தேகமும் இல்லாததால் தேவதூதனுடைய செய்தியை (16:11) ஆபிரகாமுக்கு தெரியப் படுத்தி, ஆகவே தான், **ஆபிராம் ஆகார் பெற்ற தன் குமாரனுக்கு இஸ்மவேல்** என்று பேரிட்டான். அந்த

பிள்ளைக்கு பெயர் சூட்டினதின் மூலம், ஆபிரகாம் அவனை தன் குமாரனாகவும் முறைமையான வாரிசாகவும் ஏற்றுக்கொண்டான்.[14]

**வசனம் 16.** பின்னர் சாராள் மூலமாக ஆபிரகாமுக்கு ஒரு மகன், ஒரு அடிமைப்பெண்ணின் மகன் தன் தகப்பனுடைய சொத்துக்களை முதன்மையில் நின்று அனுபவிக்க முடியாது, ஆனால் இது போன்ற ஒரு நிகழ்வு மனித சாத்தியத்திற்கு அப்பாற்பட்டுள்ளது. **ஆகார்** ஆபிராமுக்கு **இஸ்மவேலைப்** பெற்றபோது, ஆபிராம் **எண்பத்தாறு வயதாயிருந்தான்**, மேலும் சாராள் எழுபத்தியாறு வயதாயிருந்தாள்.

## பயன்பாடு

### மாற்றுப்பாதை எடுக்கும்போது (அதிகாரம் 16)

பல மனிதர்கள் பயணிக்கிற போது, திடீரென்று "மாற்றுப்பாதை எடுக்கவும்" என்ற அறிவிப்பை எதிர்ப்பட்ட அனுபவத்தை பெற்றிருப்பார்கள். இந்த அறிவிப்பின் மாற்றுப்பாதை அசலான இலக்கை அடையச்செய்யும் என்ற நம்பிக்கை கொடுத்தாலும், இது பொதுவாக மிக நல்லதாக தென்படாத ஒரு பக்க சாலையை எடுக்க சொல்லக் கூடியதாகவே இருக்கும். பல மைல்கள் தூரம் அந்த கடினமான சாலையில் பயணித்த பிறகு, திருப்பிவிடப்பட்ட வாகனத்தில் உள்ளவர்கள் அந்த அறிவிப்பைக் கேள்வி கேட்கக் கூடும். தாங்கள் வழி தவறியதாக நினைத்து, தங்களின் இக்கட்டான நிலைமைக்கு யாரோ ஒருவரை பழி கூற நேரும். வெகு தூரமான ஒரு மாற்றுப்பாதையை பின்பற்றிச் செல்லுவது ஒரு கடினமான அனுபவமாயிருக்கும்.

ஆதியாகமம் 16 ஆம் அதிகாரத்தில், ஆபிரகாம், சாராய் மற்றும் ஆகார் தங்களுக்கு ஆரம்பத்தில் சரியானதாய் தென்பட்ட ஒரு தவறான பாதையில் பயணித்து, தங்கள் வாழ்க்கைகளில் ஒரு மாற்றுப்பாதையை எடுத்தனர். அது முதலாவது சரியான பாதையாகக் காணப்பட்டது. ஆண்டவருடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதாக சாராய் எடுத்த மாற்றுப்பாதை, தங்கள் பிரச்சனைக்கு ஒரு தீர்வை கொடுப்பதற்கு பதிலாக, கூடுதலான பிரச்சனைகளையும், சச்சரவுகளையும் அவர்கள் வீட்டில் உண்டாக்கிற்று. இது சம்மந்தப்பட்ட அனைவருக்கும் ஒரு பேரழிவை கொண்ட முடிவாக இருந்திருக்கக்கூடும். இந்த வேதாகம அத்தியாயத்தில், மனிதனின் அறிவை நம்புவதால் வரும் ஆபத்து தெளிவாகிறது; இந்த வாழ்க்கைமுறை கர்த்தர் இந்த முற்பிதாவின் குடும்பத்துக்கு முன் வைத்த விசுவாச நடக்கைக்கு முரண்பாடாக வழங்கப்பட்டுள்ளது. இன்றைக்கும் கர்த்தர் அவருடைய ஜனங்களை, விசுவாசத்தில் நடப்பதால் வரும் சவால்களை சந்திக்க அழைக்கிறார். விசுவாசம், கர்த்தருடைய வாக்குத்தத்தங்களின் நிறைவேறுதலுக்காய் பொறுமையோடு காத்திருப்பதை உட் கொண்டது என்பதை இந்த

குணாதிசயம் வற்புறுத்துகிறது; இது மேலும் அவர் அவருக்கு சொந்தமான ஒரு கால அட்டவணையை வைத்துள்ளார் என்பதையும் அது நம்முடையதிலிருந்து மிகவும் வேறுபட்டதாக இருக்கக்கூடும் என்பதையும் நமக்கு நினைப் பூட்டுகிறது.

*சரியானதாய் தென்படுகிற பாதையை எடுப்பது.* உண்மையான விசுவாசம், என்பது அந்த நேரத்தில் அல்லது அப்பொழுது சரியானதாய் தென்படுகிற மாற்றுப்பாதையை எடுப்பதற்கு பதிலாக, கர்த்தருக்காய் காத்திருப்பதையே உட்பட்டது. ஆபிரகாமும் சாராயும், கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றத்தக்கதாக பல பத்தாண்டுகளாக அவரிடத்தில் காத்திருந்தார்கள். ஊரில் (11:31; 15:7; அப். 7:2, 3) கர்த்தருடைய முதல் அழைப்பு தொடங்கி எத்தனை வருடங்கள் கடந்தது என்பதையும், ஆரான் தங்களின் தேசமாக அறியப்பட்டதற்கு முன் அங்கே எத்தனை வருடங்கள் வசித்தார்கள் என்பதையும் நம்மால் யூகிக்க மாத்திரமே முடியும் (12:1-3; அப். 7:4). இப்போது, அவர்கள் கானான் தேசத்தில் பத்து வருடங்கள் வாழ்ந்துள்ளனர் (16:3); ஆபிரகாம் 85 வயதுள்ளவராய் இருந்தார், சாராய் 75 வயதுள்ளவளாய் இருந்தாள் (12:4; 17:17 பார்க்கவும்). ஆயினும், அவர்கள் குழந்தையற்றவர்களாய் இருந்தனர். எலியேசர் சாத்தியமான வாரிசாக இருக்கக்கூடும் என்பதிலிருந்து நீக்கப்பட்டார், ஏனென்றால், பூமியிலுள்ள அனைத்து ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்பட்ட காரணமாய் இருக்கப் போகிற வாக்குத்தத்தம் செய்யப்பட்ட சுதந்திரவாளி ஆபிரகாமுடைய கர்ப்பப்பிறப்பாய் இருப்பான் என்று கர்த்தர் சொல்லியிருந்தார் (15:4).

மலடியான வயதான சாராயின் மூலம் கர்த்தருடைய வாக்குத்தத்தம் எப்படி நிறைவேறக்கூடும்? அவள் தங்கள் பயணங்கள் தொடங்கிய பண்டைய மெசபெத்தோமியாவின் சட்டங்களிலும் வழக்கங்களிலும் பதிலை தேடினாள். சாராய், தன் அடிமைப் பெண்ணாகிய ஆகாரை எடுத்து, அவள் மூலமாக ஒரு குழந்தையை பெறுமாரு அறிவுறுத்தினாள் இதன் பிறகு அந்த குழந்தை தனக்குரியது என உரிமைபாராட்டக்கூடும் என்று, நினைத்தாள். இது அவளுடைய கருத்தரிக்க முடியாத நீண்ட கால இயலாமையை மேற்கொள்ளக்கூடும் என்று விசுவாசித்தாள். கர்த்தர் அவள் பிள்ளை பெறாதபடிக்கு அவள் கர்ப்பத்தை அடைத்துவிட்டார் (16:2) என்று சொல்லி அவர் மீது பழி கூறினாள். எல்லாமே வாதப்பொருத்தமுடையதாகவும் நடைமுறைக் குரியதாகவும் தென்பட்டது, ஆனால் ஆபிரகாமும் சாராயும் இத்திட்டத்தினால் எழும்பக்கூடிய பிரச்சனைகளை எதிர் நோக்கவில்லை.

காத்திருப்பதை நாம் மகிழ்ச்சியாக அனுபவிப்பதில்லை, ஆயினும், கர்த்தர் எல்லா நேரங்களிலும் ஜனங்களை விசுவாசமாயிருக்க அழைக்கிறார். உண்மையான விசுவாசம் கர்த்தருடைய வாக்குத்தத்தங்களின் நிறைவேற்றத்துக்காய் பொறுமையுடன் காத்திருக்க உதவுகிறது.

மோசேயும், காலேபும், யோசுவாவும், கர்த்தர் இஸ்ரவேலை வாக்குத்தத்த தேசத்திற்குள் பிரவேசிக்க அனுமதிக்கும் முன், நாற்பது ஆண்டுகள் வனாந்திரத்திலே காத்திருக்க நேர்ந்தது (எண். 13:17-14:45). ஆயினும், மோசே அந்த தேசத்தை கண்களால் பார்க்க மாத்திரமே அனுமதிக்கப்பட்டார்; அவரால் அதற்குள் பிரவேசிக்க முடியவில்லை (உபா. 32:48-52; 34:1-8).

யூதா மீதும், எருசலேம் மீதும் பெரும் சேதத்தை கொண்டு வர இருந்த துன்மார்க்க பாபிலோனியர்கள் மீது விழ இருந்த தெய்வீக தண்டனைக்காக, கர்த்தர் ஆபகூக்கை விசுவாசத்திலே காத்திருக்க அழைத்தார் (ஆபகூக் 2:2-4). பாபிலோனின் வீழ்ச்சி ஏறத்தாழ எழுபது ஆண்டுகளுக்கு பிறகு நிகழ இருந்தால், ஒருவேளை தீர்க்கதரிசியே அதைப் பார்க்க உயிரோடிருக்க கூடாததாய் இருக்கும (ஆபகூக் 3:16-19; எரே. 29:7-14).

அந்த தூர தேசத்திலே கர்த்தர் அவர்களை மறந்தது போல தங்கள் நம்பிக்கையை விட்டுவிட வேண்டாம் என பாபிலோனில் உள்ள யூதர்களை ஏசாயா ஊக்குவித்தார். தங்கள் சிறுமையிலிருந்து கர்த்தருடைய “மீட்புக்காக” காத்திருக்கும் நம்புகிற ஒரு புதுப்பிக்கப் பட்ட விசுவாசத்திற்கு அவர்களை அழைத்தார் (ஏசாயா 40:1-31).

புதிய ஏற்பாட்டிலே, பவுல் கிறிஸ்துவ வாழ்க்கையை, நம் சரீர (ரோமர் 8:18-25) மீட்புக்காக பொறுமையாக காத்திருக்கும் வேளையில், வேதனையின் மத்தியில் ஒரு புலம்பலின் அனுபவமாக குறிப்பிடுகிறார். “விசுவாசத்தினாலும் பொறுமையினாலும் நாம் வாக்குத்தத்தங்களை சுதந்தரிக்க முடியும்” என்று எபிரெய எழுத்தாளர் கூறியிருக்கிறார் (எபி. 6:12).

ஆபிரகாமுக்கும், சாராயிக்கும் ஒரு பிள்ளையைக் கொடுக்க ஏன் ஆண்டவர் நீண்ட காலம் காத்திருந்தார்? அவர் மாத்திரம் மகிமையை பெறும்படிக்கு (ரோமர் 4:20), அவர்கள் “சரீரஞ் செத்தவர்களாய்” (எபி. 11:12) ஆக விரும்பினார், அவர்களும், பின் வரும் எல்லா சந்ததிகளும், “கர்த்தரால் கூடாதது ஒன்றுமில்லை” (18:14) என்று நம்பவேண்டியதாய் இருந்தது. கர்த்தருடைய வழி - விசுவாசத்தின் வழி - சில நேரங்களில் கடினமாகவும் நீண்டதாகவும் தென்பட்டாலும், இதுவே நாம் பின்பற்ற வேண்டிய வழி.

*விசுவாசத்துக்குப் பதிலாக மனித அறிவை நம்புவது.* சாராய் தான் பிள்ளை பெறும் வயதை கடந்துவிட்டதை அறிந்திருந்தாள், ஆயினும் தன் கணவன் ஒரு பிள்ளையை பெற தகுதி பெற்றவராய் இருக்கிறார் என விசுவாசித்தாள். கர்த்தர், நியமிக்கப்பட்ட சுதந்திரவாளியின் தந்தையாக ஆபிரகாமை அடையாளம் கண்டிருந்தார் என்பதை அறிந்திருந்தாள், ஆனால் கர்த்தர், இதுவரை தாய் யாரென்று அடையாளம் வெளிப்படுத்தவில்லை (15:4). இயற்கையாகவே, பல ஆண்டுகளாக, அவள் ஒரு பிள்ளையைப் பெறுவாள் என

விசுவாசித்தாள்; ஆனால் இப்போது அவள் நியாயமான பிள்ளை பெறும் நிலையை கடந்ததால், ஆபிரகாமுக்கு ஒரு சுதந்திரவாளியை கொடுக்க தன் அடிமைப் பெண்ணாகிய ஆகாரை தன் கணவனுக்கு கொடுத்து, அந்த ஐக்கியத்தின் மூலம் பிறக்கும் குழந்தையை தனக்குரியதாக ஆக்கிக்கொள்வதே மிக தர்க்கமான வழி என சாராய் நினைத்தாள்.

விசுவாசத்திற்கும், காரணத்திற்கும் உள்ள கருத்து வேறுபாடு நவீன காலத்தில் தோன்றியதல்ல; அது மனித இயல்பைப் போல் பழமை வாய்ந்தது. சாராய் தேவனை விமர்சனம் செய்கிறாள். அவளுடைய திட்டம் நியாயமானது மாத்திரம் அல்ல, தேவன் அவருடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற இது மட்டும் தான் வழி என்று நினைத்தாள். இக்கட்டான சூழ்நிலையிலிருந்து வெளியே வர தேவனுக்கு தான் உதவி செய்ய முயற்சிப்பதாக கருதினாள். தேவனை மிஞ்சி யோசிக்க முயற்சிப்பது மனிதனுக்கு ஆபத்தானது. உண்மையான விசுவாசம் தேவனுடைய வார்த்தையை சார்ந்து இருக்கிறது (ரோமர் 10:17), ஆனால் சாராள் தேவனுக்கு முன்னாக ஓடி தனக்கு நல்லதாக தோன்றிய வழியை தெரியப்படுத்தினாள் (நீதி. 14:12). கர்த்தருடைய தூதனானவர் தலையிட வில்லை என்றால் சாராளுடைய வழி, வனாந்திரத்தில் கடுமையான வெப்பநிலையில் ஆகார் மற்றும் அவளுடைய பிறக்காத குழந்தையினுடைய மரணத்தின் துயரத்துடன் முடிந்திருக்கும் (16:7).

இந்த சம்பவத்தில், சாராளுடைய முக்கியமான நோக்கம் தேவனை மகிமைப்படுத்துவதற்கு அல்ல, தன் குழந்தையை நிராகரித்ததற்காக அவரை குற்றப்படுத்துவதற்கு (16:2). சாத்தான் அவளுடைய காதுகளில் இவ்வாறு ஒலித்திருக்க வேண்டும், “தேவனுக்கு உன் நலனில் இருதயம் இல்லை! அவர் உன்னை உண்மையாய் நேசித்திருந்தால், இத்தனை நாட்களுக்கு பிறகு ஆபிரகாமுடைய பிள்ளைக்கு உன்னை தாயாக்கியிருப்பார்” (3:1-6 பார்க்கவும்). தேவன் நம்முடைய ஜெபங்களுக்கு நாம் விரும்புமாறு மற்றும் நாம் விரும்பும் நேரத்தில் பதிலளிக்கவில்லை என்றால் தேவ ஜனங்களாகிய நாமும் இதே சூழ்ச்சியில் விழுந்து போகிறோம்.

மேசியாத்துவத்தை குறுக்குவழியில் எடுத்துக்கொள்ளுமாறு இயேசு பிசாசினால் சோதிக்கப்பட்டார். தன்னுடைய வல்லமையை வெளிப்படுத்துவது உபத்திரப்படுவதைவிட நியாயமாக தோன்றியிருக்கக்கூடும். நாற்பது நாட்கள் உபவாசத்திற்கு பிறகு சில கற்களை அப்பங்களாக மாற்றுவதில் என்ன தீங்கு இருந்திருக்க கூடும்? இதைப்போலவே மேசியாவாக தன்னுடைய குமாரன் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்கிற தேவனுடைய சித்தத்தை சாத்தான் முறியடிக்க நினைத்தான். தேவாலயத்து உப்பரிகையின் மேலிருந்து குதித்திருந்தால், தேவதூதனால் அவர் காப்பாற்றப் பட்டதை குறித்து சாட்சி கொடுத்திருப்பார்கள், உடனடியாக அவரை மேசியா என்று

பறைசாற்றியிருக்க மாட்டார்களா? இருந்தபோதிலும், சிலுவையில்லாத அவருடைய மேசியாத்துவம் நம்முடைய பாவங்களுக்காக அவரது கிருபாதாரபலி இல்லாமல் உலகத்தைவிட்டு சென்றிருக்கும் (1 யோவான் 2:2). சாத்தானுடைய வழி நியாயமாகத் தோன்றினாலும் இயேசு அதை புறக்கணித்தார், ஏனென்றால் அவர் மனிதகுலத்தை காலமெல்லாம் இழந்து போனவர்களாகவும் நம்பிக்கையற்றவர்களாகவும் விட விரும்ப வில்லை (1 கொரி. 15:1-4, 16-19).

*சச்சரவிற்கான சாலை.* விசுவாசத்தில் ஆவிக்குரிய திசைமாற்றம் அநேகமாக குடும்ப சச்சரவிற்கு வழிவகுக்கிறது. தேவ ஜனங்கள் உலக ஞானத்தை பின்பற்றும்போது, பொதுவாக அவை "பொறாமை," "சுயநல ஆசைகள்" மற்றும் "ஒழுங்கின்மை" ஆகியவற்றிற்கு வழிவகுக்கிறது (யாக். 3:13-18). இது தான் ஆபிரகாமுடைய வீட்டிலும் துல்லியமாக நடந்த காரியமாகும். குடும்ப சண்டைகள் வலி உண்டாக்குகிறதாகவும் சீரமைக்க கடினமானதாகவும் இருக்கக்கூடும். சாராய் ஆகாரை மறு மனையாட்டியாக ஆபிரகாமுக்கு கொடுக்கும் போது, அந்த தீர்மானம் அவர்களுடைய குடும்பத்தின் சமாதானத்தையும் ஒற்றுமையையும் எப்படி அழிக்கக்கூடியது என்று அவள் உணரவில்லை.

பவுல் கலாத்தியாவிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு எழுதினபோது "ஆவியினாலே ஆரம்பம்பண்ணின நீங்கள் இப்பொழுது மாம்சத்தினாலே முடிவு பெறப் போகிறீர்களோ?" என்று கேட்டான் (கலா. 3:3). தேவன் ஆபிரகாமையும் சாராளையும் அதே கேள்வியை கேட்டிருக்கக்கூடும். பல வருடங்களுக்கு முன்பதாக தேவனோடுகூட தங்கள் விசுவாசத்தின் ஆவிக்குரிய நடையை தொடங்கினார்கள்; ஆனால் இப்பொழுது ஒரு மாற்றுப்பாதையை ஏற்படுத்தினார்கள், தங்களுடைய மலட்டுத்தன்மையென்னும் சிக்கலான நிலைக்கு பதில் வழங்க, மாம்சத்திற்கு திரும்பினார்கள். தேவனுடைய திட்டத்தை மாற்ற நினைத்தது, அவர்களுடைய பிரச்சனையை தீர்ப்பதற்கு மாறாக, அதை இன்னும் அதிகரித்தது. அநேகமாக சாராயுடைய திட்டத்தை செயல்படுத்தின உடனே, மாம்சத்தின் கிரியைகளாகிய - "சண்டைகள்," "பொறாமைகள்," "கோபங்கள்" (கலா. 5:19, 20) - ஆபிரகாமுடைய குடும்பத்தில் பிரச்சனையை கொண்டு வரத்தொடங்கியது.

ஆகார் ஆபிரகாம் மூலமாக விரைவில் ஒரு குழந்தையை கர்ப்பந்தரித்தாள் என்று வேதாகம வரலாறு சொல்கிறது (16:3, 4); இது வெளிப்படையான உடனே, அந்த இளம் அடிமைப்பெண் கர்வமுள்ளவளானாள், சாராளை மேலும் அலட்சியமாக கருதினாள் (16:4). அவள் தன்னை சாராளுக்கு சமமாக பார்த்திருப்பாள் அல்லது தன் நாச்சியார் வகித்ததை விட அதிக தகுதி தனக்கு இருப்பது போல் நடந்திருப்பாள் (நீதி. 30:23 பார்க்கவும்). புண்படுத்தப்பட்டதும் கோபத்துடன், சாராய் தன் துயர்நிலைக்காக ஆபிரகாமை

குற்றப்படுத்தினாள். ஆபிரகாமுடைய குற்றம் தன்னுடையதிலும் பெரியதாயிருந்தது போல் நியாயம் செய்யும்படி தேவனிடம் கேட்டாள் (16:5). இந்த நிலையில், முற்பிதா ஆகாரை சாராளுடைய அதிகாரத்தின் கீழ் மீண்டும் வைத்தார்; ஆனால் சாராய் அவளைக் கடினமாய் நடத்தினாள், அவளுடைய வாழ்க்கையை பரிதாபகரமானதாய் மாற்றினதினால் அந்த எகிப்திய பெண் வனாந்திரத்திற்கு ஓடினாள் (16:6).

இந்த வீட்டைப் பாதித்த துக்கமான நிகழ்வுக்கு இதன் பங்கேற்பாளர்கள் அனைவருமே பொறுப்பு, மற்றும் ஒரு திருமணத்திலும், குடும்பத்திலும் மேலும் சபைகளிலும் கூட இது தான் அநேகமான நிகழ்வு. பொதுவாக, விவாதிக்க அநேக குற்றச்சாட்டுகள் இருக்கிறது, மேலும் கோபமும் குற்றச்சாட்டுகளும் பிரச்சனையை தீர்க்கவோ அல்லது ஒரு பிளவு இருக்கிற இடத்தில் ஒற்றுமையை புதுப்பிக்கவோ செய்யாது. அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் சமாதானத்தை திரும்பப் பெறுவதற்கு ஒருவருக்கொருவர் குற்றத்தை ஒப்புக்கொள்ளுதலும், மற்றவர்களை மன்னிக்கக்கூடிய தன்னார்வமும், மேலும் மற்றவர்களிடத்திலும் தேவனிடத்திலும் மன்னிப்பு பெறவேண்டும் என்கிற பொறுப்புணர்ச்சியும் தேவைப்படுகிறது (காண்க மத். 6:12-15; எபே. 4:29-32; கொலோ. 3:12-15).

யாக்கோபு யோசேப்பு மேல் கொண்டிருந்த பாரபட்சம் இந்த குடும்பத்தை சக்தி வாய்ந்ததாக விளக்குகிறது. யோசேப்பு தன் தகப்பனுடைய விருப்பத்துக்குரியவன் என்ற உண்மை, தன் சகோதரர்களுக்கு மேலாக தன்னையே உயர்த்த உற்சாகப் படுத்தியது. இதையொட்டி அவர்கள் அவனை வெறுத்தார்கள் மேலும் அவனைக் கொல்ல நினைத்தார்கள்; அதற்கு மாறாக எகிப்தில் அடிமையாக அவனை விற்றார்கள் மேலும் ஒரு கொடிய மிருகம் அவனைக் கொன்றதாக தங்கள் தகப்பனிடத்தில் பொய் கூறினார்கள் (37:1-36). அநேக ஆண்டுகளுக்கு பிறகு, எகிப்திலே, யோசேப்புக்கு தன் சகோதரர்களை பழிவாங்க சந்தர்ப்பம் கிடைத்தது; இருப்பினும், அவர்கள் தனக்கு செய்த தவறுக்கு வருத்தப்பட்டார்கள் என்று அவன் நம்பினபோது, அவர்களை மன்னித்து, அவர்கள் மறுபடியும் ஒரு குடும்பமாக இருப்பதற்காக அவர்களின் தகப்பனை அழைத்து வருமாறு அனுப்பினான் (45:1-28).

*அழிவிற்கான ஒரு பாதை.* ஜனங்களை தவறான பாதையில் நடத்தும் ஆவிக்குரிய திசைமாற்றம் அவர்கள் தேவனிடம் திரும்பவில்லையென்றால், அவலமானது. பிரச்சனைகளிலிருந்து விலகி ஓடுவது உண்மையாக எதையும் தீர்க்காது, எனினும் அநேகர் இந்த முறையை தொடர்ந்து முயற்சி செய்கிறார்கள், பிரச்சனைகளை சந்திப்பதற்கு பதிலாக அதிலிருந்து தப்பியோட நினைக்கிறார்கள். ஆகாருடைய நாச்சியாரைப்போல, அவளும் அவர்களுடைய சச்சரவுக்கு

ஒரு பொறுப்பாளி. அவள் மிகவும் வீம்புமிக்கவளானதால் சாராய் அவளை துன்புறுத்தி மேலும் அவள் வாழ்க்கையை கசப்பாக்கினாள். அவள் செய்ய வேண்டியது, தன்னை தாழ்த்தி ஆபிரகாமுடைய முகாமிற்கு திரும்ப வந்து, தன் பாவங்களை அறிக்கையிட்டு மேலும் தன் எஜமானியின் மன்னிப்பை தேடுவதாயிருந்தது. இதைத் தான் சரியாக, கர்த்தருடைய தூதனானவர் அவளுக்கு செய்ய கட்டளையிட்டார். ஆகார் வீட்டுக்கு திரும்பி வந்து மேலும் தன் நடக்கையில் உண்மையான மாற்றத்தைக் காட்டியிருப்பாள் என்றால், எப்பொழுதுமே கடுமையாக நடத்தப்படமாட்டாள்.

கர்த்தர், தாய் மற்றும் பிறக்கவிருக்கும் குழந்தையின் உடல் நலனில் கருசனையாய் இருந்தார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை, ஆனால் ஆபிரகாமின் குடும்பத்தினரை பிரித்த ஆவிக்குரிய காரணத்தை சரி செய்ய நினைத்தார். ஆகாருக்கு கிடைத்த தெய்வீக செய்தி அவள் கொடுமைப்படுத்தப்பட்ட இடத்தில் வரவேற்பைப் பெறுவாள் என்ற நம்பிக்கையை கொடுத்ததுமல்லாமல் அதில் அவள் ஒரு குமாரனை பெற்றெடுப்பாள் என்றும் அவன் ஜாதிகளுக்கு தகப்பனாவான் என்ற வாக்குத்தத்தமும் இருந்தது (16:10, 11). இதில் வியக்கத்தக்கது என்னவென்றால் ஆகார் கர்த்தரைக் கண்டும் உயிரோடு இருப்பதுதான், ஆகார் “தேவனுடைய நாமத்தைக்” கூப்பிட்டாள் (16:13).

வேதாகம வரலாறு முழுவதும் கர்த்தருடைய பிள்ளைகள் அவருடைய வழி நடத்துதலிருந்து வழி விலகி மாற்றுப்பாதையில் சென்று, தங்கள் வாழ்வில் இடறல் அடைந்தார்கள். அத்தகைய நேரங்களில் அவர் அவர்களை எப்போதும் அழைத்தார் - ஆகாரை அழைத்தது போல - வேறு வழியில் சென்று தன்னை பின்பற்றும் “பாதையில்” (דֶּרֶךְ, *derek*, டெர்க்) அவரிடத்திற்கு திரும்பிச் செல்ல உதவினார் (16:7-9).

தேவன் எகிப்திலிருந்து இஸ்ரவேலர்களை அழைத்து வந்த போது, செங்கடல் “வழியாய்” (*டெர்க்*) செல்லும் பாதையில் இரவில் அக்கினி ஸ்தம்பமும் பகலில் மேகஸ்பத்தினாலும் பின்பு செங்கடலினூடேயும் அவர் வழி நடத்தினார் (யாத். 13:17, 18, காண்க 14:19, 20).

அதன்பின் இஸ்ரவேலர்கள் பத்து கட்டளையை பெற்றுக் கொண்டு, கர்த்தருடைய “வழியில்” நடக்க வைத்த இடமாகிய சீனாய் மலைக்கு வழி நடத்தப்பட்டார்கள் (உபா. 5:33). அவருடைய வழி அவர்களை மரணத்துக்கு அல்லாமல் ஜீவனுக்கு நேராக வழி நடத்தும் (உபா. 30:19, 20). எனினும் அவர்கள் “சீக்கிரமாய் அவருடைய வழியை” விட்டு விலகி விக்கிரகங்களை வணங்கினார்கள் (யாத். 32:8). இந்த ஆவிக்குரிய வழி விலகல் மிகப் பயங்கரமான விளைவுகளை கொணடு வந்தது: தேவனோடு இருந்த ஐக்கியத்தை இழந்தார்கள், தங்கள் தேவாலயம் மற்றும் தங்கள் தேசம் பாழாக்கப்பட்டது, வாக்களிக்க தேசத்திலிருந்து அடிமைகளாய் கொண்டுபோகப்பட்டனர். மோசே அவர்களை

இப்படிப்பட்ட விபரீதங்களுக்கு எச்சரித்திருந்தான் (உபா. 29:24-30:1). எனினும் அவர்கள் மனந்திரும்பி தேவனிடத்திற்கு திரும்பினால் அவர் அவர்களை சிறை யிருப்பிலிருந்து விடுவித்து தங்களுடைய சொந்த தேசத்திற்கு அழைத்துக் கொண்டு வருவார் என்றும் கூறியிருந்தான் (உபா. 30:2, 3).

பின்னர் தீர்க்கதரிசிகள் மக்களிடம் தாங்கள் வழி விலகி சென்றதிலிருந்து தேவனிடத்திற்கும் முன்பு இஸ்ரவேலாய் இருந்த இடத்திற்கும் திரும்பும்படி கேட்டுக்கொண்டார்கள். ஏசாயா இவ்வாறாக கூறினார்:

> அங்கே பெரும்பாதையான வழியும் இருக்கும்; அது பரிசுத்த வழி எனப்படும். தீட்டுள்ளவன் அதில் நடந்து வருவதில்லை; அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையராய் இருந்தாலும் திசைகெட்டுப் போவதில்லை; கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி ஆனந்த களிப்புடன் பாடி சீயோனுக்கு வருவார்கள் (ஏசாயா 35:8-10; காண்க 40:3-5; 43:19; 55:7-9).

*முடிவுரை: தேவனிடத்திற்கு திரும்பும் வழி.* புதிய ஏற்பாட்டில், “இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷம்” (மாற்கு 1:1), ஆவிக்குரிய வழிவிலகலிருந்து மக்களை தேவனிடத்திற்கு திருப்பும் யோவான் ஸ்நானனின் பிரசங்கத்தோடு ஆரம்பிக்கிறது. யோவானின் வேலை என்னவென்றால் “கர்த்தருக்கு வழியை [ὁδός, *hodos*, ஹோடோஸ்] ஆயத்தப்படுத்தி அவருடைய பாதையை செவ்வைபண்ணுவதே” (மாற்கு 1:3). “மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைக் குறித்த பிரசங்கம்பண்ணி” வழியை ஆயத்தம் செய்து வந்தான் (மாற்கு 1:4) மற்றும் மக்களை இயேசுவிடம் திருப்பி “உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி” இவரே என்று கூறினான் (யோவான் 1:29)

பின்னர் சிலுவையைக் குறித்து இயேசு தன் சீஷர்களிடம் பேசி, அவர் போகவிருப்பதைக் குறித்து கூறினார். அவர் ஏன் போகப் போகிறார் என்றும், அவர்கள் ஏன் அவரைப் பின்பற்ற முடியாது என்பதையும் நினைத்து குழம்பிக் கொண்டிருந்தார்கள் (யோவான் 13:36, 37). யோவான் 14ல் இயேசு கிறிஸ்து தன் “பிதாவின் வீட்டிற்கு” சென்று அங்கே ஒரு ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணப் போகிறதாக வெளிப்படுத்தினார், மற்றும் மீண்டும் அவர்களை அழைத்துச் செல்ல வரப்போகிறதையும் கூறினார் (யோவான் 14:2, 3). இயேசு இந்த வார்த்தைகளைக் கூறி ஆச்சரியப்படுத்தினார், “நான் போகிற வழியை அறிந்திருக்கிறீக்கள்” (யோவான் 14:4). தோமா அவரை நோக்கி, “ஆண்டவரே நீர் போகிற இடத்தை அறியோமே வழியை நாங்கள எப்படி அறிவோம்” என்றான். அதற்கு இயேசு “நானே வழியும் சத்தயமும் ஜீவனுமாய் இருக்கிறேன், என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்” என்றார். பலர் தவறான வழியை எடுக்க தூண்டப் பட்டாலும் இயேசுவே தேவனிடத்திற்கும், பரலோகத்திற்கும்

மற்றும் நித்திய ஜீவனுக்கும் உண்மையான வழியாயும் பாதையாயும் இருக்கிறார். ஆதி கிறிஸ்தவர்கள் “வழியின்” ஜனங்களாய் அறியப்பட்டார்கள் (அப். 9:2; 22:4; 24:14). கிறிஸ்து மாத்திரமே பிதாவின் வீட்டிற்குச் செல்ல ஒரே வழி (லூக். 15:11-32 காண்க).

---

இறுதிக் குறிப்புகள்

[1]ஆதியாகமம் 16:3ல் கொடுக்கப்பட்டுள்ள தகவலின்படி, இந்த சமயத்தில் ஆபிரகாமுடைய வயது எண்பத்தைந்து ஆகவும் சாராளுடைய வயது எழுபத்து ஐந்து ஆகவும் இருந்தது (ஆதி. 12:4ல் ஆபிரகாம் ஆரானை விட்டு வெளியேறிய போது அவனது வயதையும் மற்றும் ஆதியாகமம் 17:17இல் இரண்டிற்கும் இடையில் உள்ள வயது வித்தியாசத்தைப் பார்க்க). [2]Hermann J. Austel, “שִׁפְחָה,” in *TWOT*, 2:947. [3]Theophile J. Meek, trans., “Real Adoption,” in *Ancient Near Easter Texts Relating to the Old Testament*, 3d ed., ed. James B. Prichard (Princeton, N.J.: Princeton University Press, 1969), 220. இந்த பழக்க வழக்கத்திற்கு வேறு உதாரணங்களாக பார்க்க Victor P. Hamilton, *The Book of Genesis: Chapters 1—17*, The New International Commentary on the Old Testament (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1990), 444. [4]ஆதாம் ஏவாளது “வார்த்தைக்குச் செவி கொடுத்தான்” என்று ஆதியாகமம் 3:17 கூறுகிறது. [5]Hamilton, 446. [6]அவர்களது பாவத்தை ஒத்துக் கொள்ளாமல், ஆதாமும், ஏவாளும் குற்ற உணர்வுடன் பழியை ஒரு வகையாக அடுத்தவர் மேல் போடும்படியே ஒரே மாதிரியாக முயற்சித்தார்கள் என்பதை ஆதியாகமம் 3:12, 13ல் பார்க்கலாம். [7]*The Code of Hammurabi* 146. [8]Leonard J. Coppes, “עָנָה,” in *TWOT,* 2:682. [9]ஆதியாகமம் 16:7, 9-11, 13; 22:11, 12, 15; 31:11, 13; 32:24, 28, 30; யாத்திராகமம் 3:2, 4; நியாயாதிபதிகள் 6:12, 14, 22; 13: 6, 9, 22 ஆகிய வசனங்களைப் பார்க்க. [10]Francis Brown, S. R. Drivver, and Charles A. Briggs, *A Hebrew and English Lexicon of the Old Testament* (Oxford: Clarendon Press, 1962), 825.

[11]இது மொழிபெயர்ப்பில் ஒரு மாறுபட்ட நிலையாய் இருக்கிறது. ஆதியாகமம் 16:12இல் இஸ்மவேல் மற்றும் அவனது உறவினர்கள் குறித்த தீர்க்கதரிசனமும், மற்றும் ஆதியாகமம் 25:18இல் அதின் நிறைவேறுதலும், ஒரே விதமாக மொழிபெயர்ப்பு செய்யப்பட்டிருக்க வேண்டும். [12]ஆர்எஸ்வி மற்றும் என்ஆர்எஸ்வி ஆகியவைகள் ஒரே மாதிரியான மொழி பெயர்ப்பாய் இருக்கிறது. [13]Kenneth A. Mathews, *Genesis 11:27—50:26*, The New American Commentary, vol. 1B (Nashville: Broadman & Holman Publishers, 2005), 192. [14]பிள்ளைகள் ஒரு அடிமைப் பெண்ணுக்குப் பிறந்தால், அவர்களது தகப்பனார் அவரது சொத்தில், பரம்பரைச் சொத்தைக் கொடுக்க அவர்களை ஏற்றுக் கொள்ள வேண்டும். (*The Code of Hammurabi* 171.)